ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
வைப்பாளர்களுக்கான அறிவித்தல்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 37ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய நிதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டிற்கு வழங்கப்பட்ட உரிமம் 2018.07.25ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச்செய்யப்படுவதுடன் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதி குத்தகைக்குவிடல் நிறுவனமொன்றாக பதிவுசெய்யப்பட்ட ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டின் பதிவுச் சான்றிதழ் 2018.07.25ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை துணையளித்தல் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அனைத்து காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மீதான நட்ட ஈட்டினைக் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்.

நட்ட ஈட்டினைக் கொடுப்பனவு செய்வதற்காக அறிவுறுத்தல்களில் தரப்பட்டவாறு வேண்டப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து கீழே குறித்துரைக்கப்பட்டவாறு முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கோரல் படிவங்களை சமர்ப்பிக்குமாறு அனைத்து வைப்பாளர்களும் இத்தால் வேண்டப்படுகின்றனர். இணைந்த வைப்பாளர்கள் வெவ்வாறான கோரல் படிவங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள், இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை ஊடாக மாத்திரம் குறித்துரைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்படும்.

கோரல் படிவம் www.cbsl.gov.lk என்ற மத்திய வங்கியின் வெப்தளத்தில் கிடைக்கப்பெறுவதுடன் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலும் மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கோரல் படிவங்கள் தேவையான ஆவணங்களுடன் 2018.12.20 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் அஞ்சல் அறையில் நேரடியாக கையளிக்கப்பட வேண்டும் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்" எனக் குறிப்பிடவும். மேலதிக விபரங்களை கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர்
தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

மேலதிக விபரங்களுக்கு:
0112 - 398788
0112 - 477261
0112 - 477583

ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
பிரகடனத்துடனான கோரல் படிவம்
இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை துணையளித்தல் திட்டம்

1. ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட் கிளையின் பெயர்:.....
2. வைப்பாளரின் விபரங்கள்:
   முழுப்பெயர்:.....
   அடையாளம்: தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு/ வியாபாரப் பதிவிலக்கம்:.....
   (தயவுசெய்து கீழே இலக்கம் (i) இல் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பார்க்க)
   தற்போதைய முகவரி:.....
   தொலைபேசி இல: (நிலையானது).....(செல்லிட).....
3. இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு வைப்பாளரின் வங்கி விபரங்கள்: (வங்கி கணக்கு புத்தகத்தின் அல்லது வங்கி கூற்றின் முதற்பக்கத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
   கணக்கு வைத்திருப்பவரின் பெயர்:.....
   வங்கயின் பெயரும் கிளையும்:.....
   கணக்கு இலக்கம்:.....
   வைப்பாளரின் விபரங்களிலிருந்து பெயர் மற்றும் முகவரி வேறுபடுமாயின் உரிமைக் கோரலாளரின் பெயர், (சட்ட ரீதியான ஆவணச் சான்றுகள் தேவையாகும்.)
   .....
4. வைப்பு விபரங்கள் (தயவுசெய்து கீழே இல (ii) (அ-ஈ) இல் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பார்க்கவும்):

வைப்பின் வகை	ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட அடையாள இலக்கம்	கணக்கு இல/கள் சான்றிதழ் இல/கள்	நிலுவையாகவுள்ள மூலதனப் பெறுமதி 2018.07.2018அன்று உள்ளவாறு
.....	.....	.....	.....
.....	.....	.....	.....

5. அங்கத்துவ நிறுவனத்திலுள்ள கடன் நிலுவை பற்றிய விபரங்கள் (ஒவ்வொரு கடனிற்குமான விபரங்கள் வேறாக வழங்கப்பட வேண்டும்) (தயவுசெய்து கீழே இல. (ii) (உ) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பார்க்க).
   (i) வழங்கப்பட்ட கடன்தொகை ரூ.....(ii) வட்டி வீதம்.....%
   (iii) கடன் காலம்:.....(iv) கடன் வழங்கப்பட்ட திகதி.....
   (v) தவணைக் கொடுப்பனவுப் பெறுமதி ரூ.....(vi) கொடுப்பனவுக்கால இடைவெளி (மாதாந்தம்/ ஆண்டிற்கு இருமுறை, வருடாந்தம்)
   (vii) இறுதிக் கொடுப்பனவுத் திகதி(ஆஆ/மாமா/திதி).....(vii) முதல் தொகை/ வெளிநின்ற மூலதனம் ரூ.....
   (viii) செலுத்தப்படாதிருக்கும் மொத்த நிலுவை ரூ.....(ix) பிணையின் வகை.....
6. பிரகடனம்
   .....(உரிமைக் கோரலாளரின் முகவரி) ஐச் சேர்ந்த .....(கோரலாளரின் பெயர்) ஆகிய நான், இக்கோரலானது, ...(வைப்பாளரின் பெயர்) சார்பில் செய்யப்படுகின்றது என்றும், சொல்லப்பட்ட வைப்பின் எந்தவொரு பகுதியும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை துணையளிப்புத் திட்டத்தின் மூலம் முன்னர் கொடுப்பனவு செய்யப்படவில்லை என்றும், அதன் அல்லது அதில் அல்லது ஏதேனும் பாகத்தின் புறக்குறிப்பீடோ அல்லது சாட்டுதலோ செய்யப்படவில்லை என்பதையும் மேலே எடுத்துரைக்கப்பட்டவாறு சொல்லப்பட்ட நிறுவனத்துடன் வேறு ஏதேனும் செலுத்தப்படாத கடன்களை நான் கொண்டிருக்கவில்லை என்றும் குறிப்பிடுகின்றேன்.

   கோரலாளர் வைப்பு/ வைப்புக்கள் மீது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை துணையளித்தல் திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் இழப்பீட்டுக் கொடுப்பனவின் பெறுகையின் மீது மூன்றாந்தரப்பினரொருவரினால் கோரப்படும் அல்லது உரிமை கோரப்படும் பொறுப்புக்கள் வட்டி, இழப்புக்கள், செலவுகள், கட்டணங்கள் என்பன உள்ளடங்கலாக, ஆயினும் இதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத ஏதேனும் அல்லது அனைத்துக் கோரிக்கைகளுக்கெதிராக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் அதன் எவரேனும் ஊழியர்கள், அலுவலர்கள், பிரதிநிதிகள் மற்றும் முகவர்களுக்கு இழப்பீட்டினை அளிப்பதற்குத் தீங்கின்றி இருப்பதற்கு இத்தால் இணங்குதல் வேண்டும்.

   ஒப்பம்:

   .....

   .....இல் 20.....மாதம.....ஆம் திகதி என் முன்னால் உறுதிப்படுத்தப்பட்டது.

   ஒப்பம்:

   .....

   சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ சத்தியப்பிரமான ஆணையாளர்/ சமாதான நீதவான்
   அலுவலக முத்திரை:

கோரல் படிவத்தை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

I. அடையாளப்படுத்தல் விபரங்களை பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொண்டு பூரணப்படுத்தல் வேண்டும்.

அ) தனிப்பட்ட கணக்குகளைப் பொறுத்தவரையில் - தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமப்பத்திர இலக்கம்

ஆ) கூட்டுக் கணக்குகளாயின், ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரினதும் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமப்பத்திர இலக்கம்

இ) பராயமடையாதோர் கணக்குகளாயின் - பாதுகாவலரின் அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமப்பத்திர இலக்கம் மற்றும் பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழ்

ஈ) தனியுடமை, பதிவுசெய்யப்படாத கழகம், சங்கம், பங்குடமை அல்லது வேறு ஏதேனும் பதிவுசெய்யப்படாத நிறுவனமாக இருப்பின் - அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின்/பங்காளர்களின் அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமப்பத்திரத்தின் இலக்கம்

உ) கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக இருக்குமிடத்து கூட்டிணைப்புச் சான்றிதழின் இலக்கம், படிவம் 20 (அதாவது பணிப்பாளர்/ செயலாளர் மாற்றம் அல்லது பணிப்பாளர்/ செயலாளரின் விபரங்கள்) மற்றும் கம்பனியின் நிலையில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் தேவைப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள் என்பன வழங்கப்பட வேண்டும்.

ஊ) மற்றைய பிரதேச/உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்குமிடத்து தொடர்பான அதிகாரசபையிடமிருந்தான பதிவுசெய்தல் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும்.

II. கோரல் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் வழங்கப்படவேண்டும்

அ) தொடர்புடைய அடையாள ஆவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள்,

ஆ) சேமிப்புக் கணக்கு விடயத்தில் சேமிப்புப் புத்தகம்,

இ) நிலையான வைப்புக் கணக்கு விடயத்தில் - மூல வைப்புச் சான்றிதழ் மற்றும் அனைத்து/ பிந்திய மீள் புதுப்பிப்புக் கடிதங்கள்

ஈ) நடைமுறைக் கணக்கு விடயத்தில் - கணக்கின் பிந்திய கூற்று மற்றும் காசோலைப் புத்தகங்கள்,

உ) கடன்கள்/ கடனட்டை மற்றும் அங்கத்துவ நிறுவனத்திற்கு வைப்பாளரினால் செலுத்தத்தக்க ஏனைய தொகை விடயத்தில் - அத்தகைய நிலுவைப் பொறுப்புகளை உறுதிப்படுத்துவதற்கு கிடைக்கத்தக்க பிந்திய கூற்றுகள்.